# குடும்பம்

2





சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# உண்மையான பெண்களை, உண்மையான தாய்களை எனக்கு பிடிக்கும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: யேகோவாயீரே 03.08.1960

உண்மையான பெண்களை, உண்மை யான தாய்களை எனக்கு பிடிக்கும்.

தேவன் நமக்கு இன்னும் அதிகமாக பழங்கால முறைமை தாய்களை நமக்கு அளிப்பாராக.

ஒரு தாய் வீட்டிலே தங்கியிராமல் எங்கோ நடக்கின்ற மது விருந்துக்கு சென்று விடுகிறாள், குழந்தைகளை யாரோ ஒரு குழந்தைகளை பாதுகாக்கும் வேலைக் காரிகள் எங்கோ ஒரு இடத்தில் வைத்துப் பாதுகாக்கின்றனர்.

அப்படியிராமல், ஒரு தாயானவள் வீட்டிலே இருந்து தன்னுடைய குழந்தை களை பார்த்துக் கொள்வாளானாள் நம்மி

டையே சிறுவர் குற்றம் புரிதல் காரிய மானது அதிகளவில் இருக்காது. அது சரியே.

அது தான் குழந்தைகளின் மனதை ஒழுக்கக் கேட்டிற்குள்ளாக்குகின்றது.

இக்காரியங்களால் அமெரிக்கா மிகவு மாக அழுகிப்போயுள்ளது. இன்னும் அழுகிக் கொண்டேயிருக்கின்றது. இன்னு மாக அழுகிக் கொண்டு தான் இருக்கும். ஒன்றுமே..

அதற்கு எதிராக நான் குரலெழுப்பிக் கொண்டு தான் இருக்கிறேன், ஆனால் அது இன்னுமாக அழுகிக்கொண்டேயிருக்கின் றது. அப்படியிருக்குமென்று வேதாகமம் கூறியிருக்கின்றது. இந்த தேசம் தன் னுடைய வாலிபப்பிராயத்திலே மரித்துப் போகும். இப்பொழுது நினைவில் கொள் ளுங்கள். வெளி. 13. அது தோன்றும்

போது அது எப்பொழுதுமே இளமையாக இருக்கும். அது தான் அந்த சிறிய வருகின்ற ஆட்டுக்குட்டி.




ஒழுங்கில்
அமைக்கப்பட்டிருக்கின்ற
ஒரு குடும்பம் தான்
சரியானதொரு வீடாகும்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: ஜீவனுக்காக தாகங்கொள்ளுதல் 13.06.1959

ஒழுங்கில் அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு குடும்பம் தான் சரியானதொரு வீடாகும்.

நாம் தெருக்களில் அநேக முறைகள் செல்கின்றோம். அப்பொழுது ஒரு வீட்டை நாம் காண்கின்றோம்.

சில நேரங்களில் நாம், "இது அருமை யான ஒரு வீடல்லவா" என்கிறோம்.

ஒருக்கால் அது ஒரு அருமையான வீடாக காட்சியளிக்கலாம், ஆனால் ஒழுங்கில் அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு குடும்பம் தான் சரியானதொரு வீடாகும். அதற்குள்ளாக இருக்கும் அந்த ஒழுங்கை பார்க்கலாம் - குடும்பத்தின் ஒழுங்கு.


தேவனுடைய வீடும் அவ்விதமாகத் தான் என்று நான் நினைக்கின்றேன்.

அது ஒரு அழகான ஆலயம் என்று நான் மெச்சுகிறதனால் அல்ல, ஆனால் அதற்குள் இருக்கும் ஒழுங்கு தான் அதன் அழகிற்கு காரணம், எந்த விதமான ஒழுங்கை அவர்கள் கொண்டிருக்கின்றனர்?

அவர்கள் உண்மையாகவே கிறிஸ்தவர்களாயிருந்து, கர்த்தரை உண்மையாகவே ஆராதித்து, அவரை உண்மையாகவே நேசிக்கிறார்களா?

அது திருத்தப்படுதலின் வீடாக இருந்து சுவிசேஷமானது பிரசங்கிக்கப்பட்டு நம்மைப் பின்தொடருமென்று இயேசு நமக்களித்த அடையாளங்கள் கூட வருகின்றதா?

இங்கே இந்த பியூலா ஆலயத்தில் அவ்விதமாகத் தான் என்று நான் நிச்சயித்திருக்கின்றேன்.



# பிள்ளைகள் ஒழுங்கை அறிய வேண்டியவர்களாய் உள்ளனர்





சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: சபை ஒழுங்கு 26.12.1963

பிள்ளைகள் ஒழுங்கை அறிய வேண் டியவர்களாய் உள்ளனர்.

அவர்கள் அதை வீட்டிலே பெற்றுக் கொள்ள வேண்டியவர்களாயுள்ளனர்.

அது என்னுடைய பிள்ளைகளாக இருந் தாலும் சரி, சாரா, ரெபேக்கா, ஜோசப், பில்லி அல்லது அது வேறு யாராக இருந்தாலும் சரி. அவர்கள் எந்த நேரத் திலும் இங்கே உள்ளே வந்து, ஒழுங்கற் றவர்களானாலும் சரி, வேறு ஒரு வழியை அவர்களுக்கு நான் பிரயோகிக்கமாட் டேன்; அதை எனக்கு சொல்லுங்கள். நான் அதைப் பார்த்துக் கொள்வேன். அவர்க ளால் ஒழுங்காக நடந்து கொள்ள முடிய

வில்லையானால், ஒழுங்காக நடந்து கொள்ள அவர்கள் கற்றுக்கொள்கின்ற வரையில் அவர்கள் சபைக்கு வராமலிருப் பார்கள்.

இது ஒரு விளையாடும் விளையாட் டரங்கமல்ல, இது தேவனுடைய வீடாகும்.

இது விளையாடுவதற்கோ, சறுக்கு விளையாட்டிற்கோ, குறிப்புகள் எழுது வதற்கோ, சிரிப்பதற்கோ, கடுமையான குறை கூறுவதற்கான இடம் இதுவல்ல, இது தேவனுடைய வீடாகும்.

இது தேவபக்தியுடன் நடத்தப்பட வேண்டிய ஒரு இடமுமாகும்.



# தாய்களாகிய நீங்கள் தான் பிள்ளைகளுக்கு கிறிஸ்துவைக் குறித்து போதிக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: மிருகத்தின் முத்திரை 15.07.1956

ஓ, என்னே, நாம் எப்படிப்பட்ட ஒரு மோசமான காலத்தில் வாழ்ந்துக்கொண் டிருக்கிறோம்.

சுற்றுமுற்றும் பார்க்கும் போது நாம் பாவத்தைத் தான் காண்கின்றோம். அதைக் கவனித்துப் பாருங்கள்.

ஓ. ஆம், ஒரு ஜெப ஆராதனைக்கு உங்களால் போக முடியவில்லை, "ஓ மிக வெப்பமாக இருக்கின்றது. "மிக குளிராக இருக்கிறது.'' "ஆம், அந்த பிரசங்கி நீண்ட நேரம் பிரசங்கம் செய்கின்றார்." என்கி றீர்கள்.

ஆனால் அந்த பழைய பிசாசின் தொலைக்காட்சி பெட்டியின் முன் இரவும் பகலும் உட்கார்ந்து உங்கள் தலையை எட்டி நிமிர்த்தி உங்களால் பார்க்கமுடியுமல்லவா.

நீங்கள் அதை நோக்கி... ஏன், சிறு பிள்ளைகளில் பாதி... தாய்களாகிய நீங்கள் தான் பிள்ளைகளுக்கு கிறிஸ்துவைக் குறித்து போதிக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள்.

வாரத்திற்கு ஒரு முறை பதினைந்து நிமிடங்களுக்கு ஞாயிறு பள்ளி வகுப்பு நடத்தும் ஆசிரியரை நம்பி சார்ந்திருக்க வேண்டாம்.


இன்றைக்கு தேசத்தில் ஒவ்வொரு பிள்ளையும் டேவிட் க்ராக்கெட் (David Crockett) யார் என்றும், எங்கிருந்து அவன் வருகிறான் என்றும், அவன் கரடியைக்

கொன்ற போது அவனுக்கு என்ன வயது என்றும் சொல்லும்.

ஆனால் பாவிகளை இரட்சிக்க இயேசு கிறிஸ்து எவ்விதம் வந்தார் என்று உங்களிடம் கூறும் பிள்ளைகள் நூறில் ஒரு பங்கு, அந்த பங்கிலிருந்து ஒரு பங்கு அளவிற்குக் கூட இல்லை.



அதற்கு பொறுப்பாளிகள் யாரென்றால் தேவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று அப்பிள்ளைகளுக்கு சொல்லித்தராமல் சரியாக வளர்த்திராத பெற்றோர்களே. அது தான் காரணமாகும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: தீர்க்கதரிசியாகிய எலிசா 02.10.1956

அப்பொழுது அங்கே ஒரு... ஓ அவனுக்கு... இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், அவனுக்கு கோபமும் இருந்தது.

அவன் தலை வழுக்கையாயிருந்ததால் சில பிள்ளைகள் அவனைப் பரியாசம் செய்ய ஆரம்பித்தனர். அப்பொழுது அவன் அந்த பிள்ளைகளை சபித்தான்.

அதற்கான முழு பொறுப்பை பிள்ளை களின் மேலேயே போடுவதென்பது மிகை யான ஒன்றாகும்.

அதற்கு பொறுப்பாளிகள் யாரென்றால் தேவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று அப்பிள்ளைகளுக்கு சொல்லித்தரா மல் சரியாக வளர்த்திராத பெற்றோர்களே. அது தான் காரணமாகும்.

இரண்டு பெண் கரடிகள் வந்து அப்பிள்ளைகளில் நாற்பத்திரெண்டு

பேரைக் கொன்று போட்டன. பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை இழந்தனர்.

ஒருக்கால் சுமார் 100 பிள்ளைகள் எலிசாவை பரியாசம் செய்து அவன் பின்னாலே வந்து கொண்டிருந்திருப்பார் கள்.

அந்த தீர்க்கதரிசி சமாரியாவினூடாக சென்று கொண்டிருந்த போது இச்சம்பவம் நடந்தது.

அந்த தீர்க்கதரிசி அங்கே வார்த்தையை மிக நீண்ட நேரம் அவர்களுக்கு பிரசங் கித்திருப்பான்.

ஆனால் அச்சம்பவத்திலிருந்து ஒரு காரியத்தை உங்களால் காண முடிகின் றதா?

தேவனுடைய செய்தியாளன் பேரில் மக்கள் கொண்டிருந்த மனப்பான்மையே அது காண்பிக்கின்றது.

# அவர்கள் அந்த பிள்ளையைக் குறித்து அக்கரை கொள்வதேயில்லை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: செல்வாக்கு 14.11.1963

நான் உங்களுக்கு இதை கூறட்டும், நான் நினைப்பதென்னவென்றால், இன்றைக்கு தேச முழுவதிலும் சிறுவர் குற்றம் புரிதல் காரியமானது அலை போல பாய்ந்து கொண்டிருக்கின்றது.

ஆனால், உண்மையாக பார்ப்போமானால், அக்காரியமானது வீட்டில் தான் ஆரம்பித்தது என்று நான் நினைக்கின்றேன்.

பெற்றோர் அவ்விதமாக விட்டு விட்டனர் என்று நான் நினைக்கின்றேன்.

பிள்ளையானது ஒரு அருமையான, பழமை நாகரீகம் கொண்ட தேவ பக்தி யுள்ள குடும்பத்தில் வளர்க்கப்பட்டிருக்குமானால், அதினால் எல்லாம் முடிந்து விடும் என்று நான் கூறவில்லை. நிச்சய

மாக இல்லை, ஆனால் அவ்விதமான ஒரு வளர்ப்பு பிள்ளைக்கு சரியான ஒரு விளைபயனை, பாதிப்பை நிச்சயமாக அது உண்டாக்கியிருக்கும்.

அநேக சமயங்களில் நான் நினைப்பது என்னவென்றால் அநேக வீடுகளில் பிள்ளைகள் தவறான விதத்தில் வளர்க்கப் பட்டு தெருக்களில் திரிய விடப்பட்டு அப்பிள்ளையின் தாய் அல்லது அதன் தந்தை மதுபான பார்களில் இருக்கையில் அப்பிள்ளை தனக்கு வேண்டியதை தானே பார்த்துக் கொள்கின்றது.

அவர்கள் அந்த பிள்ளையைக் குறித்து அக்கரை கொள்வதேயில்லை.

மற்றொரு காரியம் என்னவென்றால் அவர்கள் அதை நேசிக்காமல் அதற்கு தேவைப்படுகின்ற பாசத்தை காண்பித்து அதை எடுப்பதேயில்லை.

அது சிறு பிள்ளையாகும். நீங்கள் அதற்கு அன்பு, மரியாதை மற்றும் வேதத்தை வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள்.




பெண்களே,
உங்கள் வழிகளை
சற்று சிந்தித்துப்
பாருங்கள்

## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: என் வழியை சிந்தித்துக் கொண்டிருந்த போது, 14.08.1959

பெண்களாகிய உங்களில் சிலர் உங்களுடைய பிள்ளைகளுடன் வீட்டில் இருந்து அவர்களுக்கு வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள்.

ஆனால் நீங்களோ இன்னும் கூடுதலாக பணம் சம்பாதிக்க வெளியே வேலைக்குச் செல்கிறீர்கள். உங்களுக்கு வெட்கமுண்டாவதாக.

தேவன் உங்களுக்கு ஒரு வேலையை கொடுத்திருக்கின்றார். அதென்னவென்றால் பிள்ளைகளை வளர்ப்பது, தேவனு

டைய காரியங்களை, அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். அது தான் உண்மை யாகும்.

பெண்களே, உங்கள் வழிகளை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

அந்த பணம் என்ன செய்யும்? யூதாஸ் காரியோத்து செய்தது போல அது செயலில் நின்று காண்பிக்கும்.

உங்கள் வழிகளை சற்று சிந்தித்து உங்கள் கால்களை அவருடைய சாட்சிக்கு நேராகவும், அவருடைய இரத்தத்திற்கு நேராகவும், அவருடைய கிருபையண் டைக்கும், அவருடைய கோரிக்கைக்கும் திருப்புங்கள்.

“என் வழிகளை சிந்தித்துக் கொண்டு என் கால்களை உம்முடைய சாட்சிக்கு

நேராக திருப்பினேன்" என்று தாவீது கூறினான்.

நிச்சயமாக, நீங்கள் செல்கையில் உங்கள் வழிகளை சிந்தித்துக்கொண்டே செல்லுங்கள்.




அவள் கர்த்தருடைய
பிரமாணங்களை அவனுக்குக்
கற்றுக்கொடுத்தாள்

## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: அமெரிக்காவின் மீது படையெடுப்பு 09.05.1954

இக்காலையில் தாய்களாகிய நீங்கள், உண்மையான தாய்களாக இருந்து வருகின்ற நீங்கள், உங்களில் அநேகர் இருக்கிறீர்கள் என்று நானறிவேன்; உங்களில் ஒவ்வொருவரும் என்று நான் நினைக்கிறேன்.

உங்களுக்கு நான் ஒன்றைக் கூறட்டும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, நான் நினைப்பதென்னவென்றால் நீங்கள் தான் ஐந்தாவது சுவிசேஷமாகும்.

உங்கள் பிள்ளைகளுக்கு என்ன இருக்கின்றது என்று நான் உங்களுக்கு

கூறட்டும், ஒரு சிறு காரியம் மாத்திரமே. ஏனென்றால் சகோதரன் நெவில் ஒருக்கால் இதன் பேரில் பிரசங்கிக்கக்கூடும்..... அல்லது நம்மில் யாராவதொருவர் இன் றிரவு ஒரு தாயைக் குறித்து பிரசங்கிக் கலாம் அது சரியே, தாய்களைக்குறித்து, ஆனால் கவனியுங்கள், உங்களை ஒன்று நான் கேட்கட்டும்.

நினைவில் கொள்ளுங்கள், மோசே ஒரு சிறு பையனாக இருக்கையில் அவனுக்கு வேண்டிய போதனையை அளித்தது ஒரு தாயாகும்.

அவள் சிறு மோசேயை தன் முழங் கால்களில் வைத்துக் கொண்டு மோசே என்று கூறி எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்தது ஒரு தேவபக்தியுள்ள தாயாகும்.

அவன் தான் அவளுடைய ஆசான் ஆவான். இல்லை. அவள் தான் அவனுடைய ஆசான் ஆவாள். அவள் பார்வோனுக்கு கீழாக இருந்து அவனுக்கு இந்த காரியங்களையெல்லாம் கூறினாள்.

அவள், " மோசே, ஒரு நாளிலே நீ இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்கப்போகின்றாய். அதை செய்வதற்காக அழைக்கப்பட்ட பையன் நீயே. உலகத்தின் காரியத்தினாலே உன்னை கறைப்படுத்திக் கொள்ளாதே. உன்னை பரிசுத்தமாக வைத்துக் கொள். ஏனென்றால் நீ தான் அந்த காரியத்தை செய்வதற்காக அழைக்கப்பட்ட ஒருவன்” என்று கூறினாள்.

அவன் எந்த ஒரு வேதகலாசாலைக்கும் செல்லவில்லை என்பதை நாம் அறிவோம். அஞ்ஞானியின் இடமாகிய பார்வோனின் அரண்மனைக்குள்ளாகவே அவன் தங்கி

யிருந்தான்; ஆனால் அவனுடைய தாய் அவனுக்கு போதனை செய்தாள். (சகோதரன் பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டுகிறார் - ஆசி.) அது தான் ஒரு உண்மையான தாய்.


அவள் கர்த்தருடைய பிரமாணங்களை அவனுக்குக் கற்றுக்கொடுத்தாள்.

அவன் எவ்விதமாக பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்று அவள் எடுத்துக் கூறினாள்.

அவன் எப்படி, எந்த விதத்தில், எவ்விதமாக ஜீவிக்க வேண்டுமென்றும், தேவன் என்ன செய்யப் போகிறார் என்றும் அவனுக்கு என்ன செய்யப்போகின்றார் என்றும் கூறினாள்.

அது அவன் ஜீவிய கால முழுமையும் அவனுடனே தரித்து நின்றது.

ஆகவே எந்த ஒரு அருமையான, உண் மையான, உத்தமமான தாயும் தன்னுடைய சிறு குழந்தைகளை படக்காட்சிகளுக்கும், நடன ஆட்டங்களுக்கும் அதைப் போன்ற வற்றுக்கும் அனுப்பாமல், அவளே தன்னு டைய சிறு பிள்ளைகளை எடுத்துத் தன் மடி மீது வைத்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வைக் குறித்துக் கற்றுக் கொடுப்பாள்.



அப்பொழுது பிரசங்கி, “மண்ணுக்கு மண், புழுதிக்கு புழுதி” என்று கூறுகையில், பூமியிலே உங்களுக்கு இருந்ததிலேயே உங்கள் சிறந்த நண்பரானவர் கீழே போகின்றார் என்பதை நீங்கள் உணருவீர்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: வாழ்க்கைக்கதை, 15.04.1951

ஆகவே வாலிபப் பிள்ளைகளே, வாலிபர்களே, சற்று கவனியுங்கள்.

அது எந்த காரணமாயிருந்தாலும் அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை; நீங்கள் எப்பொழுதுமே உங்கள் தந்தை மற்றும் தாய் பேரில் மரியாதையைக் கொண்டிருங்கள்.

நான் கேட்பதிலேயே மிகவும் பயங்கர மான காரியங்களில் ஒன்று என்னவென் றால் பிள்ளைகள் அல்லது வாலிப மக்கள் "அந்த வயதான கிழவன்" மற்றும் "அந்த வயதான கிழவி' என்று கூறுவதேயாகும்.

கவனியுங்கள், அது "வயதான கிழவன்'' மற்றும் “வயதான கிழவி" அல்ல; அவர்கள் உங்கள் தகப்பன் மற்றும் தாய் ஆவார்கள்.

ஒரு நாளிலே அவர்கள் சவபெட்டி யிலே கிடத்தப்பட்டு, அதற்கு கீழாக சக்கரத்தைக் கொண்ட அந்த சவ வண்டி யில், அறையிலிருந்து தலைப்பாகமானது முதலாவதாக வெளியே தள்ளப்பட்டு அறையைவிட்டு வெளியேறும் போது, அப்பொழுது அவர்கள் “வயதான கிழவன்' அல்லது “வயதான கிழவி” என்பதாக உங்களுக்கு தோன்றாது. அது சரியே.

அப்பொழுது பிரசங்கி, "மண்ணுக்கு மண், புழுதிக்கு புழுதி” என்று கூறுகையில், பூமியிலே உங்களுக்கு இருந்ததிலேயே உங்கள் சிறந்த நண்பரானவர் கீழே போகின்றார் என்பதை நீங்கள் உணரு வீர்கள்.

ஆனால் தொல்லை என்னவெனில், அதை நீங்கள் மிகவும் காலதாமதமாக உணருவதேயாகும்.


அப்பொழுது நீங்கள் கதறி அழுது அதிகமான மலர்கள் வைக்க வேண்டாம்.

அதற்கு பதிலாக இப்பொழுதே அந்த மரியாதையைக் கொடுங்கள்.

ஒரு அருமையான பையனாக அல்லது அருமையான சிறு பெண்ணாக இருங்கள்.



# அவர் தாய் தான் அவர் கர்த்தருக்கு சேவை செய்யத்தக்கதாக வளர்த்து ஆளாக்கினவராவார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: தாயின் தினம், 10.05.1959

இந்த காரியத்தை நான் வாலிபப் பிள்ளைகளுக்கு கூறுவேனாக.

ஆபிரகாம் லிங்கன் தன்னுடைய இருபத்தோறாம் வயது வரைக்கும் வேதாகமம் மற்றும் ஃபாக்ஸின் இரத்த சாட்சிகளின் பட்டியல் ஆகிய இரண்டு புத்தகங்களைத் தவிர வேறு எந்த புத்தகத் தையுமே வைத்திருக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?

பாருங்கள், நீங்கள் எதை வாசிக்கின் றீர்களோ, அதுவே உங்கள் குணாதிச யத்தை உருவாக்கும்.

இன்றைக்கு நம்மிடையே நரம்புத்தளர்ச் சியை கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தை

நாம் கொண்டிருப்பதில் வியப்பொன்று மேயில்லை.

அசிங்கமான மற்றும் அர்த்தமற்ற சிறுகதை புத்தகங்கள் மாத்திரமே இன்று பத்திரிகைக் கடைகளில் வைக்கப்பட்டுள் ளன.

ஆபிரகாம் லிங்கன் வேதாகமத்தையும், ஃபாக்ஸின் இரத்த சாட்சிகளின் புத்தகத் தையும் மாத்திரமே வைத்திருந்தார். ஆகவே அவரை உருவாக்கினது என்ன வென்று பாருங்கள்.

காரியமானது இந்த விதமாக இருக் கையில் ஒரு நாள் இந்த விதமாக அவர் கூறினார். அவர் கூறினது என்னவென்றால், "என்னில் நல்ல காரியம் ஏதாவது காணப்படுகிறதென்றால் அதற்கு காரணம் என்னுடைய தேவ பக்தியுள்ள தாய் தான்" எனக் கூறினார்.

அவர் தாய் தான் அவர் கர்த்தருக்கு சேவை செய்யத்தக்கதாக வளர்த்து ஆளாக்கினவராவார்.



அவர் கூறினது என்னவென்றால், ‘உங்கள் பெற்றோரை கவனித்து அதை நீ தொடர்ந்து செய், அப்பொழுது அது உனக்கு பூமியின் மீது நீண்ட ஆயுளைத் தரும். அவருக்கு அதிக காலம் சேவை செய்யும்படியாக கர்த்தர் அதை உனக்குத் தந்திருக்கிறார்' என்பதே



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: வழிநடத்தும் தன்மை. என்னைப் பின்பற்றுங்கள், 31.12.1965

அது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா, வேதாகமத்திலிருக்கின்ற முதல் கட்டளை என்னவென்பது உங்களுக்குத் தெரியுமா, முதல் கட்டளையானது ஒரு வாக்குத்தத்தமாகும். என்ன வாக்குத்தத்தம் அது? இந்த கட்டளைகளை நீங்கள் அறிந்துக் கொள்வதென்பது சற்று கடின மான ஒன்றாகும். முதலாம் கட்டளை என்னவெனில், "அவரைத் தவிர வேறெந்த ஒரு தேவனையும் நீங்கள் கொண்டிருக் கக்கூடாது என்பதாகும்.

ஆனால் மகத்தான கட்டளை என்ன வென்றால்... அந்த முதலாம் கட்டளை

யானது ஒரு வாக்குத்தத்ததையும் கொண்டதாக இருக்கின்றது. பாருங்கள், அந்த வாக்குத்தத்தம் பிள்ளைகளுக்கான ஒன்றாகும். அதை நீங்கள் அறிவீர்களா? பாருங்கள்.

அவர் கூறினது என்னவென்றால், 'உங்கள் பெற்றோரை கவனித்து அதை நீ தொடர்ந்து செய், அப்பொழுது அது உனக்கு பூமியின் மீது நீண்ட ஆயுளைத் தரும். அவருக்கு அதிக காலம் சேவை செய்யும்படியாக கர்த்தர் அதை உனக்குத் தந்திருக்கிறார்' என்பதே.

# சிறுபிள்ளைப் பருவத்தைப் போல வேறெதுவும் கிடையாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: என் வாழ்க்கைக் கதை 08.11.1953

சிறுபிள்ளைப் பருவம் மற்றும் சிறு பிள்ளை பருவத்திலிருந்து வாலிபப் பருவத்திற்கிடையே உள்ள பருவத்தைக் குறித்து சிறந்த ஒன்று உண்டு, வாழ்க்கை முழுவதுமாக இருக்கின்ற பருவங்களிலே இந்த பருவத்தின் இடத்தை வேறு எந்த பருவமும் எடுக்க முடியாது.

பழைய காரியங்களை நினைத்துப் பாருங்கள். நாம் தவறு செய்யும் போது நம்முடைய தாய்கள் நம்முடைய தகப்ப னிடத்தினின்று நம்மை இழுத்து ஒரு சிறு அடியைக் கொடுப்பார்கள் அல்லவா? ஓ, அது பயங்கரமானதல்லவா.

ஆனால், இந்த மத்திய வேளையில் உங்களில் அநேகர் உங்களோடு கூட நானும் - அதை அறிவோம். இந்த பூமியில் என் தந்தை இருந்து அவர் ஒரு அடி எனக்கு கொடுப்பதை நினைத்துப் பார்க் கும் போது அந்த நினைவுகளுக்காக என் னால் எதையுமே கொடுத்து விட முடியும்.

என் தகப்பனார் இனிமேல் அவ்வித மாக செய்ய முடியாது. அவர் கடந்து சென்று விட்டார்.

உங்களில் அநேகருக்கு அவ்விதமாகத் தான் இருக்கும். சிறுபிள்ளைப் பருவத் தைப் போல வேறெதுவும் கிடையாது.


சரி, ஒருக்கால் நீங்கள் பிள்ளைகள்
நிறைந்த ஒரு குடும்பத்தை வளர்த்து
எழுப்பவே தேவன் இங்கே உங்களை
கொண்டு வந்திருக்கக்கூடும்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: புத்திர சுவிகாரம் அல்லது பொருத்தப்படுதல் 22.05.1960

சரியாக ஸ்தானத்தில் பொருத்தப்படாதிருக்கின்ற இங்கேயிருக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும்...

நீங்கள் ஒரு இல்லத்தரசியாக மாத்திரம் இருந்து மற்ற எதுவுமாகவும் இல்லாதிருக்கலாம்.

நீங்கள், “சகோதரன் பிரன்ஹாம், என் வாழ்க்கையில் நான் ஒரு காரியத்தைக் கூட செய்யவில்லை. நான் ஒரு பிரசங்கியும் கூட அல்ல” என்று நீங்கள் கூறலாம்.

சரி, ஒருக்கால் நீங்கள் பிள்ளைகள் நிறைந்த ஒரு குடும்பத்தை வளர்த்து

எழுப்பவே தேவன் இங்கே உங்களை கொண்டு வந்திருக்கக்கூடும்.

அந்த பிள்ளைகளினிடத்திலிருந்து மற்றுமொரு பிள்ளைகளைக் கொண்ட குடும்பமானது எழும்பும், அதிலிருந்து ஒரு பிரசங்கி வந்து கிறிஸ்துவுக்கு பத்து இலட்சம் ஆத்துமாக்களை அனுப்பலாம்.

ஆகவே நீங்கள் இங்கே இருக்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள்.

நீங்கள் ஒரு நோக்கத்திற்காகவே இங்கே இருக்கிறீர்கள். அதை நீங்கள் அறிவீர்களா?





# தகப்பன்களாகிய நீங்கள், தாய்களாகிய நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு பீடத்தை ஏற்படுத்தி வீட்டிலுள்ள அந்த தொலைக்காட்சிப் பெட்டியை வெளியே எடுத்துப் போட நீங்கள் ஆயத்தமா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: இன்னும் ஒரு விசை கர்த்தாவே 20.01.1963

தகப்பன்களாகிய நீங்கள், தாய்களாகிய நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு பீடத்தை ஏற்படுத்தி வீட்டிலுள்ள அந்த தொலைக் காட்சிப் பெட்டியை வெளியே எடுத்துப் போட நீங்கள் ஆயத்தமா?

மேஜையில் இருக்கின்ற சீட்டுக்கட்டு களை எடுத்துப்போட நீங்கள் ஆயத்தமா?

உங்கள் பிள்ளைகள் வாசிக்கின்ற காமிக்ஸ் புத்தகங்களானது பிசாசு அவர் களுக்கு கொடுக்கவிருக்கும் அந்த அதிரடிக்கு அவர்களுடைய சிறிய மனதை தயார் செய்கின்றன.

அந்த பழங்கால குடும்ப பீடத்தை உங்கள் வீட்டில் நிறுவ நீங்கள் ஆயத்த மாயிருக்கிறீர்களா, அல்லது நீங்கள் இருக் கின்ற வண்ணமாகவே தொடர்ந்து அந்த வழியையே பின்பற்றவே விரும்புகிறீர் களா, நீங்கள் அதைத் தொடர்ந்து செய்ய விரும்பினால், நீங்கள் வெளியே வரும் நிலையில் இல்லாதிருக்கிறீர்கள்.

ஆனால், ''கர்த்தாவே நான் அவர்க ளோடு மடியட்டும்" என்று சிம்சோனைப் போல நீங்கள் இருக்க வேண்டுமென்று நான் ஜெபிக்கின்றேன். அது தான் நீங்கள் காணும் கிரயம். உங்களின் ஆயத்தம்.



குடும்பத்திலுள்ள ஒருவர்
ஏதாவதொன்றைக் குறித்து கவலை
கொண்டால், அது அடுத்தவருக்கு,
அடுத்தவருக்கு பரவி விடுகிறது.
அப்பொழுது குடும்பம் முழுவதுமே
கவலைக்குள்ளாகின்றது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: கேள்விகளும் பதில்களும்
## 23.08.1964

---

நீ குடும்பத்திலுள்ள ஒருவர் பயந்து போகும்படி செய்தால் அது அடுத்த அங்கத்தினருக்கு, அடுத்த அங்கத்தின ருக்கு பரவுகிறது.

அப்பொழுது நடக்கின்ற முதல் காரிய மானது நீங்களெல்லோரும் தேவையற்ற பரபரப்படைந்து அனைவரும் பயந்து விடுகிறீர்கள்.

குடும்பத்திலுள்ள ஒருவர் ஏதாவதொன் றைக் குறித்து கவலை கொண்டால், அது அடுத்தவருக்கு, அடுத்தவருக்கு பரவி விடுகிறது. அப்பொழுது குடும்பம் முழு வதுமே கவலைக்குள்ளாகின்றது.

அது சாத்தான், குடும்பத்திலுள்ள ஒருவர் களிகூர்ந்தால், குடும்பத்திலுள்ள மற்றவர் அவருடன் களிகூரட்டும். எனவே குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் அதைச் செய்ய முயலுங்கள்.

---

# இந்த சிறுவர்களை யார் கொடுமையாக நடத்த முடியும்? நீங்கள் அப்படி ஒருக்காலும் செய்யக்கூடாது



# செய்தி: *62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி*

14. ஓ, அவர்கள் மிக அழகானவர் கள்... இந்த சிறு பிள்ளைகள். எனக்கு எல்லோரையும் பிரியம். ஆனால் நான் நினைக்கிறேன். சிறு பிள்ளைகளும் வயோ திபர்களும்; உங்களுக்கு வயதாகும் போது. வயோதிப ஆண்களும் வயோதிப பெண் களும், தங்கள் வாழ்க்கையில் நீண்ட காலம் பயணம் செய்து இந்நிலையை அடைந்துள்ளனர். அவர்கள் மிகவும் பலவீனமடைந்துள்ளனர். காணப் பரிதாபம் தோன்றுகிறது. அவர்களை நாம் தள்ளி விடக் கூடாது. அவர்கள் தெருக்களைக் கடக்கும்போது, நின்று உதவி செய்யுங்கள். அது உங்கள் தந்தையாகவோ தாயாகவோ இருக்குமானால்? பாருங்கள்? அவர்கள் வேறு யாருடைய தந்தையோ தாயோ.

எனவே அவர்களை மதியுங்கள். அவர்கள் ஒருக்கால் மெள்ள, நீண்ட நேரம் பேசலாம். நீங்கள் கேட்க விரும்பாதவைகளை அவர்கள் பேசலாம், ஆனால் நீங்களும் ஒரு நாள் முதிய பருவத்தை அடையக் கூடும் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். எனவே அவர்களை எப்பொழுதுமே மதியுங்கள்.

15. இந்த சிறுவர்களை யார் கொடுமை யாக நடத்த முடியும்? நீங்கள் அப்படி ஒருக்காலும் செய்யக்கூடாது. இயேசு, “இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்ப மாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்'' என்றார். (மத் 18:10) அவர்களுக்கு ஒரு தேவதூதன் இருக்கிறான் என்பதை நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் பிறந்த முதற்கு உங்கள் வாழ்க்கை பூராவும் அவன் உங்களுடன் தங்கியிருக்கிறான். நீங்கள்

இரட்சிக்கப்படும் போது, அப்பொழுது உங்களுக்கு பரிசுத்த ஆவி உள்ளது. அது உங்களை வழி நடத்தி, நீங்கள் நடக்க வேண்டிய வழியை உங்களுக்குக் காண் பிக்கிறது.



# போதகரும் நானும் இங்கு நின்று கொண்டு குழந்தையை கையிலேந்தி, பிரதிஷ்டை ஜெபத்தை கர்த்தரிடம் ஏறெடுக்கிறோம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி

சிறுவர்களை பிரதிஷ்டை செய்யும் போது நாம் வழக்கமாக பாடும் பாடல் ஒன்றுண்டு. அது, "கொண்டு வாருங்கள், சிறுவர்களை இயேசுவினிடம் கொண்டு வாருங்கள்" என்னும் பாடலாகும்.

அநேக சபைகள் சிறுவர்கள் மேல் தண்ணீர் தெளிக்கின்றன. அவர்கள் அவ்வாறு செய்ய விரும்பினால் பரவா யில்லை. வேறு சிலர் அம்முறையைக் கையாண்டு, அதை ஞானஸ்நானம் என்ற ழைக்கின்றனர். அவர்கள் அதை ஞானஸ் நானம் என்றழைக்க விரும்பினால் பரவா யில்லை.

ஆனால் நாமோ வேதம் கூறியுள்ள விதமாகவே அதை கைக்கொள்ள விரும்புகிறோம். வேதத்துடன் நிலைத்திருக்க விரும்புகிறோம். வேதத்தில், புதிய ஏற்பாட்டில், அவர்கள் சிறு பிள்ளைகளை இயேசுவினிடம் கொண்டு வந்தபோது, அவர்களை அவர் ஆசீர்வதித்து, ''சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது (மத். 19: 14; மாற் 10:14) என்றார். நாங்கள் அதைத்தான் பின்பற்றுகிறோம். போதகரும் நானும் இங்கு நின்று கொண்டு குழந்தையை கையிலேந்தி, பிரதிஷ்டை ஜெபத்தை கர்த்தரிடம் ஏறெடுக்கிறோம். பின்பு அவர்கள்...

11. ஒரு குழந்தைக்கு, அது பிறக்கும் போது உள்ள பாவத்தை தவிர்த்து, வேறு பாவமில்லையென்பதே எங்கள் கருத்து.

நாம் அனைவருமே பாவத்தில் பிறந்து, அக்கிரமத்தில் உருவாகி, பொய் பேசுகிற வர்களாய் இவ்வுலகில் வந்தோம். இயேசு கல்வாரியில் மரித்தபோது, அவர் உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்த்தார். ஒரு குழந்தை பிறக்கலாம், அல்லது பிறக்கும் முன்பே மரித்து போகலாம். அல்லது கணக்கு கொடுக்கும் வயது வருவதற்கு முன்பே மரித்தும் போகலாம். அப்படியானால் அதற்கு பாவமே கிடை யாது. இயேசு உலகத்தின் பாவங்களைப் போக்கினார். ஆனால் அது போதிய வயதை அடைந்து பாவம் செய்யும்போது, அது பாவத்தை அறிக்கையிட்டு, அதன் பின்பு பாவமன்னிப்புகென்று ஞானஸ் நானம் பெறவேண்டும். பார்த்தீர்களா? ஆனால் இப்பொழுதோ அது மிகவும் வயது குறைந்ததாயுள்ளது.

# வீட்டார் இரட்சிக்கப்பட





பவுல் அந்த ரோம சேவகனிடம், ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' என்றான் (அப் 16:31). நீங்கள் இரட்சிக்கப் பட உங்களுக்கு போதிய விசுவாசம் இருக்குமானால், உங்கள் மகனோ மகளோ எவ்வளவாக வழி தவறி சென்றிருந்த போதிலும், அவர்கள் எப்படியாயினும் இரட்சிப்படைவார்கள் என்னும் போதிய விசுவாசத்தைப் பெற்றிருங்கள்; தேவன் எப்படியாயினும் அவர்களை இரட்சிப்பார். தேவன் அதை வாக்களித்துள்ளார்- அந்த சுதந்தரத்தை.






# குடும்பம்

2

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து